**செய்தி வெளியீடு எண்:876** **நாள்:17.11.2020**

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டிலுள்ள கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள், கறிக்கோழி நிறுவன உரிமையாளர்களால் தங்களுக்கு வழங்கப்படும் வளர்ப்புக் கூலியை உயர்த்துதல், வளர்ப்புக்கூலி கணக்கிடும் முறைகளைச் சீராக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டி தொடர்ந்து கோரிக்கை விடுத்திருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை. கே. ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் தலைமை செயலகத்தில் தமிழ்நாடு கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர் மற்றும் கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர் சங்க பிரதிநிதிகளுடன் 17.11.2020 அன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மை செயலாளர் மரு.கே.கோபால்,இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்த பேச்சுவார்த்தையின் போது கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர்கள், கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு குறைந்தபட்ச வளர்ப்புத்தொகையான ரூ.3.50/–லிருந்து ரூ.6/–ஆக உயர்த்தி வழங்கவும் மற்றும் 2000–க்கும் குறைவாக கறிக்கோழிகள் வளர்க்கும் சிறுபண்ணையாளர்களுக்கு கோழி ஒன்றுக்கு ரூ.1/– (ரூபாய் ஒன்று) வீதம் கூடுதல் ஊக்கத்தொகையாக வழங்கவும் இருதரப்பினராலும் ஒருமனதாக ஒத்துக்கொள்ளப்பட்டது.

கறிக்கோழி வளர்ப்பதற்கான ஒப்பந்தம் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய முறையில் தமிழில் ஒரே மாதிரியாக வடிவமைக்கப்படவும், இருதரப்பினரும் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்த பத்திரத்தின் நகல் கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு வழங்கப்படவும், தீர்மானிக்கப்பட்டு கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

கறிக்கோழி பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் குறைந்த விலையில் கிடைக்கப்பெறும் உமி, கடலைப்பொட்டு, மரத்தூள் போன்றவற்றை கோழிகளின் படுக்கை பொருட்களாக பயன்படுத்திக் கொள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நிறுவனங்கள் கொடுக்கும் தீவனம் மற்றும் மருந்துகளை தவிர மற்ற பொருட்களை கறிக்கோழி வளர்ப்புப் பண்ணையாளர்கள் கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர்களின் ஒப்புதல் இல்லாமல் பண்ணையில் பயன்படுத்த கூடாது என தெரிவிக்கப்பட்டது.

கறிக்கோழி ஒருங்கிணைப்பாளர்கள் தரமான கோழிக்குஞ்சுகள் மற்றும் தீவனங்கள் வழங்க வேண்டும் என்றும், பண்ணையாளர்களின் செயல்திறன் பாதிக்கப்படாமல் இருக்க ஒவ்வொரு தொகுப்பிற்கும் முறையான தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

கறிக்கோழி பண்ணை தொழிலில் நிலவி வந்த வளர்ப்புக்கூலி மற்றும் இதர பிரச்சனைகளுக்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களின் நேரடி நடவடிக்கையின் மூலம் ஏழை, எளிய கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் உரிய பலன் பெறும் வகையில் கறிக்கோழி நிறுவன உரிமையாளர்கள் மற்றும் கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் இடையே முத்தரப்பு பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடத்தப்பட்டு மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

அப்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், கறிக்கோழி வளர்ப்புத் தொழில் மென்மேலும் வளர்ச்சிப்பெற்று எல்லா நலமும் வளமும் பெற்று சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**